17.04.2023

**CC No. 30/2018**

அரசு தரப்பு சாட்சி **-2-** சுமதி

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு பொதுவாக என்.டி.பி.எஸ் சட்டபிரிவுகள் மற்றும் அதன் நடைமுறைகளும் நன்றாக தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எனக்கு கிடைத்த தகவலை தனி தாளில் பதிவு செய்து அதன் நகலை உயர் அதிகாரிக்கு அனுப்பினேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி தகவலை உயர்அதிகாரிக்கு என்ன முறையில் தெரிவித்தேன் என்று குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக கூறினேன். அ.சா.ஆ.2-ல் அதனை ஆய்வாளர் பெற்றுக்கொண்டதற்காக மேற்குறிப்பு இல்லை என்றால் சரிதான். நான் பதிவு செய்ததாக கூறப்படும் பொதுநாட்குறிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் அத்தாட்சி, சோதனை சம்மதகடிதம் யாரால் எழுதப்பட்டது என்று குறிப்பாக கூறப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மதகடிதம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் எதிரி மற்றும் மேலும் சில விபரங்கள் பேனாவால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் சம்பவ இடம் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 13.30 மணிக்கு தயாரிக்கப்பட்டது. அத்தாட்சி 13.00 மணிக்கு தயாரிக்கப்பட்டது. அத்தாட்சியில் சட்ட பிரிவுகளும், குற்ற எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியின் கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான்.

சான்றுப்பொருட்களை அன்றைய தேதியில் 13.30 மணிக்கு ஆய்வாளரிடம் ஒப்படைத்து விட்டேன். நான் 27.02.2017 அன்று பணிமாறுதல் பெற்று சென்றேன். நான் பணிமாறுதல் பெற்று செல்லும் வரை சான்றுப்பொருள் காவல் ஆய்வாளர் வசம் இருந்தது தெரியும். நான் பணிமாறுதல் பெற்று செல்லும் வரை சான்றுப்பொருள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. 23.05.2017 அன்றுதான் சான்றுப்பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் 11 மாத கால தாமதத்திற்கு நாங்கள் தான் காரணம் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சான்றுப்பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் எனவேதான் அதை உரிய காலத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் ரகசிய தகவல் எதுவும் எனக்கு பெறப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் ரோந்துக்கு செல்லவில்லை என்றும், சொன்ன நேரத்தில் சோதனை சம்மத கடிதம் எதையும் தயார் செய்யவில்லை என்றும் நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், அவரிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் புள்ளிவிபர கணக்கிற்காக பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து எதிரியை அச்சுறுத்தி வழக்கு ஆவணங்களில் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் போதை பொருள் சட்ட விதிகளை முறையாக கடைப்பிடிக்க வில்லை என்றால் சரியல்ல.